**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**பல்கலைக்கழக விசேட அனுமதி**

**பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு**

**பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2024 / 2025**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற G.C.E. உயர் தர (A/L) பரீட்சைக்கு தோற்றிய பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களிடமிருந்து, 2024/2025 கல்வியாண்டிற்கான விசேட அனுமதி நிபந்தனையின் கீழ், கீழே பட்டியலிடப்பட்டுள்ள பட்டப்படிப்புகளைப் பின்பற்ற விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

இந்த நிபந்தனையின் கீழ் அனுமதி பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள், 2024/2025 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிகள் கையேட்டின் பிரிவு 1.2 மற்றும் 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதிகளை கொண்டிருக்க வேண்டும். (கையேடு UGC இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.)

இந்த விசேட அனுமதியின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான தகுதி நிபந்தனைகள்:

- பார்வையற்ற விண்ணப்பதாரர்கள் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற G.C.E. உயர் தர (A/L) பரீட்சையை பிரெயில் (Braille) முறையில் எழுதியிருக்க வேண்டும்.

- மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் செல்லுபடியாகும் மருத்துவச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

- 2024/2025 கல்வியாண்டிற்கான சாதாரண மாணவர் அனுமதியின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்காத பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களும் இந்த சிறப்பு ஏற்பாட்டின் கீழ் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

- இந்த விசேட அனுமதி நிபந்தனையின் கீழ் முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

- பாடநெறிகளை விருப்பொழுங்கு வரிசையில் விண்ணப்ப படிவத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

- செயன்முறை/திறனறிவு பரீட்சைகள் தேவையான பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் நடாத்திய செயன்முறை/திறனறிவு பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.இது தொடர்பாக பல்கலைக்கழகங்கள் செயன்முறை/திறனறிவு பரீட்சையை நடாத்தும்.

| யூனி-கோட் | கற்கைநெறி | பல்கலைக்கழகம் | மாணவர்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | பார்வையற்றவர்கள் | மாற்றுத் திறனாளிகள் |
| 019C | கலை | ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இலங்கை | 07 | - |
| 016C | முகாமைத்துவம் | | - | 10 |
| 012C | கணினி விஞ்ஞானம் | | - | 04 |
| 099C | மென்பொருள் பொறியியல் | | - | 03 |
| 096C | தகவல் முறைமைகள் | | - | 03 |
| 104C | தகவல்&தொடர்பாடல் தொழில்நுட்பம் | | - | 02 |
| 016J | முகாமைத்துவம் | இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் | - | 05 |
| 079J | முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் | இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் | - | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (SEUSL) | | | |
| 016M | முகாமைத்துவம் | வயம்ப பல்கலைக்கழகம் | - | 05 |
| 068Z | இசை # | கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம் | 03 | 03 |
| 085Z | கட்புல கலை # | | - | 03 |
| 007R | பிரயோக விஞ்ஞானம் (உயிரியல் விஞ்ஞானம்) | வவுனியா பல்கலைக்கழகம் | - | 05 |
| 015R | பிரயோக விஞ்ஞானம் (பௌதீக விஞ்ஞானம்) | | - | - |
| 038R | தகவல்&தொடர்பாடல் தொழில்நுட்பம் | | - | - |
| 104R | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | - | 10 |

# இந்தப் பாடநெறிக்குத் தகுதியுடையவராக இருக்க, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் நடாத்தும் செயன்முறை/திறனறிவு பரீட்சையில் தேர்ச்சி பெறுதல் அவசியம்.

விண்ணப்பிக்கும் முறை:

விண்ணப்பப் படிவம் UGC இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025 டிசம்பர் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மின்னஞ்சல் மூலம்:

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை ஸ்கேன் செய்து கீழே காணும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்:

daadmission@ugc.ac.lk

அஞ்சல் மூலம்:

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தின் அச்சுப் பிரதியை கீழ்க்கண்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்:

பிரதிச்செயலாளர் / பல்கலைக்கழக அனுமதிகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல 20, வார்ட் பிளேஸ்,
கொழும்பு 07

மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள், தங்களின் நிலையை உறுதிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழ் அல்லது மாற்றுத் திறனாளி நிலை மதிப்பீட்டு அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல்களை இணைக்க வேண்டும்.

விண்ணப்பத்திகதி முடிவடைந்த பின் பெறப்படும் விண்ணப்பங்கள் அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல 20, வார்ட் பிளேஸ் ,
கொழும்பு 07

16 நவம்பர் 2025